பத்திரிக்கை செய்தி

சூரிய சக்தியால் இயக்கப்படும் பம்பு செட் அமைக்க லஞ்சம் கேட்டு பெற்ற அப்போதைய இளநிலை பொறியாளருக்கு 4 ஆண்டுகள் கடுங்காவல் சிறை மற்றும் ரூ.12,000/- அபராதம் விதித்து தீர்ப்பு

புகார்தாரர் திரு.முத்தையன், இஞ்சிகுடி, பேரளம் அஞ்சல், நன்னிலம் தாலுக்கா, திருவாரூர் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் தன்னுடைய நிலத்தில் மனைவி பெயரில் சூரிய சக்தியால் இயக்கப்படும் பம்பு செட் அமைக்க விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேல்நடவடிக்கை எடுக்க திரு.ராமலிங்கம், இளநிலை பொறியாளர், விவசாய பொறியியல் துறை, பவித்திரமாணிக்கம், திருவாரூர் மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ.60,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார் பின் ரூ.50,000/- லஞ்ச பணத்தை குறைத்து கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, திருவாரூர் பிரிவில் புகார் அளித்தார். இப்புகாரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது கடந்த 09.01.2014 திரு.ராமலிங்கம், இளநிலை பொறியாளர், விவசாய பொறியியல் துறை, புகார்தாரரிடமிருந்து ரூ.50,000/- லஞ்சப்பணம் பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையினரால் கைது செய்யப்பட்டார். இவ்வழக்கானது திருவாரூர் மாவட்ட முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் இன்று 19.06.2026 திரு.ராமலிங்கம், இளநிலை பொறியாளருக்கு 4 ஆண்டுகள் சாதாரண சிறை தண்டணையும் மொத்தம் ரூ.12,000/- அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.